Rebate on handloom cloth

* 523 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the reason for reducing the rebate given to handloom weavers from 6 naye Paise to 3 naye Paise?

THE HON. SRI R. VENKATARAMAN : The rate of rebate on retail sales of handloom cloth continues to be 6 naye Paise in the rupee but the Government of India have reduced the rebate on wholesale sales from 6 naye Paise to 3 naye Paise in the rupee with effect from 1st July 1959. They have stated that the change was introduced with a view to minimising the expenditure on the rebate scheme so that larger sums might be available for other developmental schemes and to plug loopholes which result in abuses.

SRI N. K. PALANISAMI : May I know whether the Government are aware of the fact that since the reduction of 3 nP. in rebate was made on the wholesale price, the societies are put to a lot of trouble since the wholesaler refuses to purchase on the reduced wholesale price, will the Government consider the question of restoring the original 6 nP. rebate for wholesale dealer?

THE HON. SRI R. VENKATARAMAN : I want to clear a confusion. So far as the public are concerned for all sales of handloom cloth a rebate of 6 nP. is given. So far as sales to wholesalers are concerned the rebate is only 3 nP. But wholesalers do not give any rebate when they effect resale to the public. I do not think that there should be a special plea in favour of wholesalers when they are not passing on the rebate to the public.

SRI A. MARIAPPAN : ஸார், மொத்த வியாபாரிகளுக்கு மூன்று நயா பைசா என்று ரிபேட் கொடுத்தாலும் அவர்கள் வெளியில் குறைந்த விலையில் விற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? சில்லறை வியாபாரத்திற்கும் மொத்த வியாபாரத்திற்கும் இடையே இந்த விதமான வித்தியாசம் காண்பிக்கப்படுவதால் கூட்டுறவு சங்கங்களுக்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பது சர்க்கார் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் கஷ்டப்பட வேண்டிய அவசியமொன்றுமில்லை. பொதுவாக கூட்டுறவு சங்கங்கள் எல்லாம் பொதுமக்களுக்கு அதிகமான அளவில் விற்பனை செய்ய வேண்டும் என்பதுதான் சர்க்காரின் நோக்கம். அதோடு ஹோல்ஸேல் வியாபாரிகளுக்கு எல்லா ரிபேட்டையும் கொடுத்துவிட்டால் அது சரியாக பொதுமக்களுக்கு போய்சேராது. அதனால் தான் இந்த வித்தியாசம் செய்யப்படுகிறது. கூட்டுறவு சங்கத்தின் தலைமை வகிக்கின்ற கனம் அங்கத்தினர் அவர்கள் இதன் மூலம் பொதுமக்கள் அதிகமான அளவுக்கு கூட்டுறவு சங்கங்களில் வந்து வாங்கும்படியான நிலைமையை கொண்டு வரவேண்டும். அதற்காக வேலை செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI N. R. THIAGARAJAN : கைத்தறித் துணிகளை கண்ணால் பார்ப்பதில்லை, கையால் தொடுவதில்லை, உடலால் தீண்டுவதில்லை என்று கனம் அங்கத்தினர் பழனிசாமியைப் போன்றவர்கள் விரதம் பூண்டிருப்பதால்தான் இந்த ரிபேட் தொகை குறைக்கப்பட்டதா ? இனி மேல் அவர்கள் கண்ணால் பார்க்க, கையால் தொட ஒப்புக்கொண்டால் இந்த ரிபேட் தொகையை அதிகரிப்பார்களா ? (சிரிப்பு)

(பதில் இல்லை)

23rd March 1960]

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: இந்த ரிபேட் தொகையை மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கத்திற்கு ஜனத்தொகை அடிப்படையில் ஒதுக்குகிறதா ? அல்லது அந்தந்த ராஜ்யத்தில் இருக்கக் கூடிய தறிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து ஒதுக்குகிறதா ? அப்படி எண்ணிக்கையைப் பொறுத்து ஒதுக்கினுல், மற்ற மாநிலங்களுக்கு அதிக மான அளவுக்கு கழிவுத் தொகை கொடுக்கப்படுவதாகப் பத்திரிகையில் வருகிறதே, அப்படியானுல் அங்கெல்லாம் தறிகளின் எண்ணிக்கை அதிக மாக இருக்கிறது என்று அர்த்தமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தறிகளின் எண்ணிக்கை அடிப்படையில் தான் கழிவுத் தொகை கொடுக்கப்படுகிறது. ராஜ்யத்திற்கு ராஜ்யம் தறிகளின் எண்ணிக்கையில் வித்தியாசம் இருக்கிற கார ணத்திஞல் நம் ராஜ்யத்திற்கு அதிகமாகவும் மற்ற ராஜ்யங்களுக்குக் குறைவாகவும் கொடுக்கப்படுகிறது. வேறு ராஜ்யங்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்வது தவறு என்று பட்ஜெட் பொது விவாதத்தின் போது கூறியிருக்கிறேன்.

MR. SPEAKER : If hon. Members want any ruling from the Chair, I would request them to rise in their seats and raise a point of order. Otherwise, I am unable to help them.

SRI T. SAMPATH : Is there any proposal to extend this rebate facility to handloom silk goods?

THE HON. SRI R. VENKATARAMAN : There has been a demand on behalf of the silk weavers also. But the Government of India have not agreed to the suggestion.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இந்த கழிவுத் தொகையையே நம்பி கைத்தறியாளர்கள் இன்னும் எத்தனை நாட்களுக்கு அதையே எதிர்பார்த்துக்கொண்டு இருப்பது ? வேறு வகையில் தங்கள் காலிலேயே நிற்க வழிவகை வகுப்பதில், மில் துணியில் சில ரகங்களை ஒதுக்கிக்கொடுப்பது போன்றவைகளில், சற்று அதிக கவனம் செலுத்து வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தினம் தினம் சாப்பிட்டுக் கொண்டே எத்தனை நாள் வாழ்வது ? கொஞ்சம் சாப்பிடுவதை நிறுத்தி விட்டால் நல்லது. . .(சிரிப்பு). அதே மாதிரி உதவி இல்லா மல் இந்தத் தொழிலை நடத்த முடியாது—யந்திரங்களுடன் போட்டி போட முடியாது. இதற்கு உதவி கொடுத்துத் தான் ஆகவேண்டும். ஆனால் அந்த உதவியை எந்த முறையில் கொடுக்கவேண்டுமென்று அப்போதைக்கப் போது பரிசீலிக்கப்படுகிறது. உதவி கொடுப்பதைப் பற்றி இரண்டுவித அபிப்பிராயம் இருக்க முடியாது.

SRI K. R. VISWANATHAN : கூட்டுறவு சங்கங்கள் பொது மக்களுக்கு விற்கவேண்டும் என்ற நல்லெண்ணம் இருந்தாலும், கைத்தறி உற்பத்தி அதிகமாக இருப்பதால் கைத்தறி முழுவதும் பொதுமக்களுக்கு விற்கப்படாமல் தேங்கிக் கிடக்கிறது. வியாபாரிகளும் வாங்க முன் வருவ தில்லை. அப்படி முன் வந்தாலும் அதே ரிபேட்டைக் கொடுத்தால் தான் வாங்குவோம் என்று சொல்கிறார்கள். இந்த ரிபேட் தொகையை 3 சதவிகிதமாக இருவருக்கும் ஒன்றாக அமைக்க சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : எந்தெந்த காலங்களில் தேக்கம் ஏற்படுகிறதோ அந்தக் காலத்திலெல்லாம் உடனடியாக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. தேக்கம் ஏற்பட்ட போது சர்க் கார் நிதியிலிருந்து 25 லட்சம் ரூபாய் அளவுக்கு பணம் கொடுத்து துணி களையெல்லாம் மத்திய சங்கத்தை வாங்கும்படி அனுமதித்திருக்கிறோம். அதே போல் தேக்கம் இருக்கிற காலத்தில் ரிபேட் தொகையை அதிகரித்துக் கொடுத்திருக்கிறோம். அந்த மாதிரி ஒவ்வொரு முறையிலும் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிற காரணத்திஞல், இந்தப் பிரச்னை " ஹைபாத்தெட்டிகல் "என்று சொல்ல விரும்புகிறேன்.